**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 83/2021**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 27.10.2025 | | |
| பெயர்: | சுமதி<br>(PW–1 Cross ) | கணவர் பெயர்: | கருணாநிதி |
| கிராமம்: | புதுப்பேட்டை<br>தில்லைவிடங்கன் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | வயது : | 61/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 27.10.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.21 )**

1. தாவா சொத்தில் ஒரு பகுதியை தேசிய நெடுஞ்சாலைத்துறை சார்பில் ஒரு பகுதி கையகப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தேசிய நெடுஞ்சாலைத்துறையை நான் இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் பரிகாரம் கேட்டிருப்பது மொத்த சொத்தான 21 செண்ட்டிற்கு என்றால் சரிதான். 21 செண்ட் நிலத்தை சுற்றிலும் வேலியோ, காம்பவுண்ட்டோ எதுவும் இல்லாமல் வெட்ட வெளியாக இருக்கிறது என்றால் சரிதான்.

2. இந்த பிரதிவாதியை ஏன் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் அவர் எனது இடத்தை அபகரிக்க நினைத்தார் அதனால் வழக்கு தாக்கல் செய்தேன். தாவா சொத்திற்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையில் மனைகட்டு உள்ளதா என்றால் உள்ளது. வழக்கு சொத்திற்கு 3வது இடத்தில் பிரதிவாதி குடியிருந்து வருகிறார், அவர் எனது சொத்தை ஆக்கிரமிக்க வந்தார் என்பதற்காக

வழக்கறிஞர் மூலமாகவோ, வேறு நீதிமன்றம் மூலமாகவோ, காவல் நிலையம் மூலமாகவோ ஏதேனும் சட்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

3. தாவா சொத்தை காத்திருப்பு கிராமத்தை சேர்ந்த சாந்தி என்பவரிடமிருந்து நான் கிரயம் பெற்றேன். சாந்திக்கு தாவா சொத்து எவ்வாறு கிடைத்தது என்பதற்கான மூல ஆவணம் ஏதும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் மூல ஆவணத்தின் சான்றிட்ட நகல் (வா.சா.ஆ.2) தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து என் வசத்தில் உள்ளது என்பதற்கான ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4, வா.சா.ஆ.5 ஆவணங்கள் சான்றிட்ட நகல் இல்லை என்ற காரணத்தால் அந்த ஆவணங்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றால் சரியல்ல. சாந்தியும் பிரதிவாதி சிந்தாமணியும் உடன்பிறந்த சகோதரிகள். நான் தாவா சொத்தை ஆவணப்படி 2002ம் வருடம் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான், ஆனால் அதன் அனுபவத்தை இதுவரை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

5. எனது அனுபவத்தில் இல்லாத சொத்திற்கு நான் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் எனது அனுபவத்தை ஊர்ஜிதம் செய்யாத காரணத்தால் அதன் அடிப்படையில் நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது, நான்தான் பிரதிவாதி மீது வேண்டுமென்றே வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. தாவா சொத்தின் வடபுறம் கிழக்கில் மூங்கில் குத்து உள்ளது என்றால் சரிதான். அந்த குத்தில் உள்ள மூங்கில்களை பிரதிவாதிதான் தற்போது வரை அறுவடை செய்து கொண்டிருக்கிறார் என்றால் இல்லை, நானும் செய்திருக்கிறேன். பிரதிவாதி சொத்திற்கும் சுப்ரமணியன் சொத்திற்கும்

இடையில் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். எனது சொத்திற்கும் சுப்ரமணியன் சொத்திற்கும் இடையில் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான்.

7. நான் வழக்கு சொத்தை கிரயம் பெற்றிருந்தால் தாவா சொத்தை சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் எழுப்பியிருப்பேன், அவ்வாறு இல்லாததால்தான் காம்பவுண்ட் எழுப்பவில்லை என்றால் சரியல்ல. ஆனால் அதில் நான் வேலியிட்டிருந்தேன், அந்த வேலி பிரதிவாதியின் மகன் பார்த்தசாரதி மற்றும் அவரது உடன்பிறந்தவர்களால் பிரிக்கப்பட்டுவிட்டது. அது சம்மந்தமாக நான் பாகசாலை காவல்நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

8. பிரதிவாதி அனுபவத்தில் உள்ள சொத்தை பொறுத்து அவர் வேலியை பிரிக்க வேண்டிய அவசியமில்லை, நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தேசிய நெடுஞ்சாலை தாவா சொத்திற்கு மேற்கு புறத்தில் வருகிற காரணத்தால் நான் துர்லாபம் அடையும் நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதின்படியும் ஆவணங்களின் படியும் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி மற்றும் அவரது மகன் மீது சுவாதீன மீட்பு பரிகாரம் தான் கோர முடியுமே தவிர நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**(முடிவு நேரம்– 12.41)**